கிழக்கில் அச்சுக் கலையின் முன்னோடி...
வனசிங்கா பிரிண்டர்ஸ்

496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065 222 7170, 065 36 50 361
wanasingheprinters@gmail.com



# தமிழ் ஓசை

மட்டக்களப்பு

"தரணியெங்கும் தமிழை உரக்கச் சொல்வோம் உரைக்கச் செய்வோம்"

BATTICALOA



மட்டக்களப்பில்...
பத்திரிகை விற்பனைத்துறையில் முன்னோடி
ராதா ஸ்ரோர்ஸ்

திருமலைவீதி, மட்டக்களப்பு.
(வயோதிபர் இல்லத்துக்கு முன்னால்)



முன்னாள் முதலமைச்சர் விசனம் 05

மறைந்தும் மக்கள் மனங்களில் வாழும் மாணிக்கவாசகர் 10

05 யானைகள் அட்டகாசம் அச்சத்துடன் மக்கள்

03 இலை உதிர் காலம்



ஒலி : 01 ஓசை : 04 மாதாந்த வெளியீடு (நவெம்பர்) பக்கம் : 12 விலை : 30.00




## வடகிழக்கில் உதயமாகுமா? புதிய கூட்டணி


04 பக்கத்தில்


## பௌர்ணமி தினத்தில் ஆன்மீக அருளுபதேசம்

மனிதனும் அவன் மனமும் கலியும் கலியிலிருந்து விடுபடும் வழியும் இறைவன் அருளைப் பெறுவது எப்படி எனப் பல விதமான உண்மையான அரிய ஆன்மீக இரகசியங்களை உலக மக்களின் நலன் கருதி அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக இன்று வரை........




பக்கம் 09




## மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரச அதிபராக மா. உதயகுமார்



## மருத்துவக் கல்லின் மகத்துவங்கள்

உள்ளே... புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான நுண்ணறிவு பயிற்சி வினாக்கள்

கலைஞர் கௌரவம்



## கிழக்கு போற்றும் கலைஞர் நீலாவணன்


SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA
sunfancylk.com
fb.com/sunfancyhouse
065 222 3092
சின்ன ஆஸ்பத்திரி எதிரில்...

உங்கள் அன்பானவர்களுக்கான
நத்தார் மற்றும் புதுவருட அன்பளிப்புகளை
மலிவாகவும் தரமாகவும் வாங்க
இன்றே விரையுங்கள்


**“வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல”**

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

# நல்லிணக்கத்தை நோக்கி பயணிக்க வேண்டும்...

இன்றைய ஆட்சி நல்லாட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் காலப்பகுதியாக சமூகங்களிடையே காணப்படுகின்றது. போர் இயற்கை அனர்த்தம் போன்றவற்றால் உயிர் உடமை இழப்புக்கள் வாட்டி வதைத்து சென்ற காலங்களை எல்லாம் மீட்டிப்பார்க்கின்ற போது வேதனைதான். அவை எதனை கற்றுத் தந்திருக்கின்றது என்பதனை நாம் இன்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. பல்வேறு இன்னல்களுக்கு முகங் கொடுத்து வாழ வேண்டும் என்ற நிலையினைத்தான் உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றோமே தவிர இன்னல்களை களைந்து நிம்மதியாக எதிர் கால வாழ்க்கையினை நோக்கிப் பார்க்கின்றோமில்லை. எவரும் எதையும் எப்படியும் செய்யலாம் பேசலாம் என்ற மமதை மேலோங்கி காணப் படுகின்றது. கருத்துச்சுதந்திரம் இருக்கின்றது என்னால் எதையும் வெளியிடமுடியும் பேச்சுச் சுதந்திரம் இருக்கின்றது என்னால் எதையும் பேசமுடியும் என்று எண்ணிவிடக் கூடாது. ஒரு வசனத்தில் ஒரு சொல் பிழைத்தால் அதற்கு பல அர்த்தங்களை வெளிப்படுத்தும். விவாதிக்க செய்யும் விவாதம் விதண்டாவிதமாக மாறும் ஏன் இவை ஒரு சொல்லின் தவறு எத்தகைய நிலைமைக்கு எம்மைக் கொண்டு சென்று விடும் என்பதனை யாரும் சிந்திப்பதில்லை. எதை எடுத்தாலும் இனவாதம் மதவாதம் பிரதேசவாதம் என்றுதான் இவை எவற்றை எமக்கு கற்றுத் தந்திருகின்றது. அழிவையும் இழப்பையும் இனமுறுகலையும் கற்றுத்தந்த பாடமேதவிர இனநல்லுறவைக் கற்றுத்தரவில்லை. ஒருசிலரின் சுயநல போக்கிற்காக ஒட்டுமொத்த சமுகத்தையும் விரோதியாக பார்க்கக் கூடாது. சிறு பிரச்சினைக்காக பெரும் அழிவை நாம் ஏற்படுத்த முயற்ச்சிக்க கூடாது. எங்கு பார்த்தாலும் இனமுரன்பாட்டு செயற்பாடுகளும் வார்த்தைப் பிரயோகங்களும் மலிந்து விட்ட சம்பவங்களாக நாளந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் வாழைச்சேனையில் இருசமூகங்களிற்குமிடையில் ஏற்பட்ட இனமுறுகல் நிலை மீண்டுமொரு வன்முறைக்கு வித்திடுவதற்கு ஊதிப் பெருப்பிப்பதற்கு சிலர் எத்தனித்த முயற்சியும் இரண்டு சமூகத்தையும் எதிரியாக்கி மீண்டும் ஓர் இனக்கலவரம், இடப்பெயர்வு, உயிரிழப்பு, உடமை அழிப்பு போன்ற கடந்தகால கசப்புணர்வினை மீண்டும் தோற்றுவித்திடும் அச்சநிலை இருந்ததை காணமுடிந்தது. ஏன் அநாவசியமாக இத்தனை வஞ்சகங்களும் பழிவாங்கல்களும் நான் பெரியவன் நீ சிறியவன் என்ற நிலையினை தூக்கி வெளியில் வைத்துவிட்டு மனிதாபிமானமாக சிந்தித்துப் பாருங்கள் எதை கொண்டு போக போகின்றோம் எத்தனை காலம் வாழப்போகின்றோம். என்று மனதிற்குள் வினாவை கேட்டுப் பாருங்கள் விடைதெரிந்தும் வெட்கப்படுவோம் இன்னும் நாம் எதிர்கால சந்ததியினை வளமாக வாழ வைக்க நற்பண்புகளை ஊட்டிவளர்த்து நல்லதொரு சமுதாயமாக வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டுமே தவிர அந்த இளம் சந்ததியிற்கு குரோத மனப்பக்குவத்தை ஊட்டி வளர்த்து எதுவித பலனையும் காணப் போவதில்லை. இதற்காக சமூகத்தில் அக்கறையு ள்ளவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்ப பாடுபடவேண்டும். எந்தப்பிரச்சினையாக இருந்தாலும் பிரச்சி னைக்குரிய இருதரப்பும் ஒன்று சேர்ந்து ஒரு மேடையில் மனந் திறந்து பேசி ஒரு முடிவிற்கு வந்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர. எடுத்தேன் கவிழ்த்தேன் என்றால் எந்த அர்த்தமும் இல்லை. ஏன் என்றால் எதிர்கால சந்ததியிற்கு நாங்கள் நிறைய விடையங்களை கற்றுக்கொடுக்க வேண்டியிருக்கின்றது. எதுவானாலும் பேசித்தீர்த்து ஒரு முடிவிற்கு வரவேண்டுமே தவிர வன்முறை வேண்டாம் என்பதுதான் எல்லோரினது விருப்பமுமாகும்.

**தமிழ் ஓசை பத்திரிகையினை சந்தாமுறையில் பெற்றுக் கொண்டு ஊக்கப்படுத்துங்கள்.**



காலாண்டு - 90/=
அரையாண்டு - 180/=
வருடாந்தம் - 360/=
(தபால்செலவு உள்ளடக்கப்படவில்லை)

**தமிழ் ஓசை**
இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.
தொ. பேசி இல.: 077 318 00 33 | மின்னஞ்சல் : thamilosai7@gmail.com

“ஆசையும் ஏக்கமும் செல்வத்தை சேர்க்காது
உழைப்பே செல்வத்தைத் தரும்”

# நல்ல சிந்தனையோடு வாழ்பவர்களே! எமது சமூகத்திற்கு தேவையானவர்கள்

மனிதாபிமான முறையில் சமூக சிந்தனையோடு வாழ்பவர்களே எமது சமூகத்திற்கு தேவையானவர்களாக இருக்கின்றார்கள். அவர்களாலேயே நல்ல உணர்வுடன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மனிதாபிமான முறையில் சிறப்பாக செயலாற்ற முடியும். எனவே அவ்வாறானவர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும் என காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையம் சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த உள பாதிப்புக்குள்ளானவர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.





இக்கல்வி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. தேவரஞ்சினி பிரான்சிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில். உளநலத்துறை நன்கு வளர்ச்சியடைந்து சிறந்த உளநல சேவையினை மக்களுக்கு முன்னெடுத்து செல்லப்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. எனவே பிரிவினைகள் எதுவுமின்றி திறந்த மனதுடன் செயலாற்றும் தன்மை உருவாக்கப்பட வேண்டும். பொறுப்பு வாய்ந்தவர்கள் உளநலத்துறையின் கட்டமைப்பை சிறந்த முறையில் உருவாக்கி சிறந்த சேவையை வழங்க முன்வர வேண்டும். அப்போது தான் ஒவ்வொருவரும் எடுக்கின்ற முயற்சியில் இருந்து முழுமையான பயனை அடைய முடியும். மதுபாவனை போதைவஸ்து போன்றவற்றை பாவிப்பவர்களை ஆராய்ந்து பார்க்கும் போது அவர்கள் உளநல பதிப்புக்கு உள்ளானவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்களே உளநல செயற்பாட்டுக்கு தடையாகவும் காணப்படுகின்றார்கள். இவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்டு மேலும் உளப்பாதிப்பை அடைகின்றார்கள். இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளாலும் அவற்றை எதிர்கொள்ளும் திறன் இன்மையாலும் பல வகையிலும் பாதிப்புறுகின்றனர். எனவே இவ்விதமான பிரச்சினைகளில் இருந்து பாதிக்காமல் அனைவரையும் கண்ணுற்று எம்மா லான உதவிகளை செய்ய நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். அப் போதுதான் உளநலம் உள்ள சமுதாயத்தை ஓரளவேனும் நாம் உருவாக்க முடியும். உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை இனம் காண்பதற்கான அறி வைப் பெற்று அவர்களை சரியாக புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவி புரிய ஒவ்வொருவரும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். உளநல சேவை என்பது சவால்களை எதிர்கொண்டு செயலாற்ற வேண்டிய ஒன்றாகும். எனவே அதற்கான அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றை வளர்த்தெடுத்தல் காலத்தின் கட்டாயமாகும். இன்று உளநல அறிவு இன்மையால் பாதிக்கப்பட்டவர்களை வேறு கண்ணோட்டத்துடனேயே சமூகம் நோக்குகின்றது. சமூகம் இதில் இருந்து இன்னும் மாறவில்லை. எனவே நாம் உளநல அறிவை பெறுவோம். உளநலம் காப்போம், உளநல சேவை புரிகின்றவர்களை ஊக்குவிப்போம் என்றார். இலங்கை போக்குவரத்து அதிகாரசபை மட்டக்களப்பு உதவிப்பணிப்பாளர் உ.யுவநாதன் கருத்துத் தெரிவிக்கையில் உண்மையிலேயே மனிதாபிமானத்துடன் செயல் புரிவது என்பது இன்று அரிதாகவே காணப்படுகின்றது. இச் செயலானது மிகவும் இலகுவான ஒன்று அல்ல ஆனால் எம்மவர்களிடம் நல்ல கற்றறிந்த அறிவு இருந்தும் நல்ல பணம் இருந்தும், இடம் இருந்தும் நல்ல மனம் இல்லாமையே கவலைக்குரிய விடயமாகும். அவர்கள் இன்னமும் அறிவு திறன் மனப்பாங்கில் பக்குவப் படவில்லை அதனாலேயே இவ்வாறான செயலைச் செய்வதில் சிரமமாக உள்ளது. இக்கல்வி நிலையத்தைப் பொறுத்த வரையில் வருடா வருடம் நல்ல மனம் உள்ளவர்களை இனம் கண்டு பாதிப்புற்றவர்களுக்கு உதவிகள் புரிவது வரவேற்கப்பட வேண்டியதுடன் இவ் அமைப்புடன் இணைந்து செயலாற்ற வேண்டியதும், காலத்தின் கட்டாயமாகும். இவ் அமைப்பானது பாதிப்புற்றவர்களுக்கான வாழ்வாதார உதவி, உளநலகல்வி, பாதிப்புற் றோருக்கு சிகிச்சைக்கான உதவி, பிரச்சினைக்குட்பட்டவர்களுக்கான வழிகாட்டல்கள் என பல சேவையினை முன்னெடுத்து வருகின்றது. இச்சேவை வாழ வளர வேண்டும் நானும் இனிவரும் காலங்களில் இணைந்து செயலாற்ற உள்ளேன் என்றார். கல்லடி வேலூர் றிலிபன் கட்டிட நிர்மாணப் பணியகத்தின் உரிமையாளர் வை.பாக்கியராஜா அவர்களின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதயம் விழிப்புனர்வற்றோர் சங்கத்தின் முன்னாள் தலைவர் பெரியசாமி செல்வநாதன், உள ஆற்றுப்படுத்தல் கல்லூரியின் பணிப்பாளர் எம்.நேசராஜ், நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் ஏ.ஆர்.எல்.அமான் உலக நண்பர்களுக்களின் தேவைக்கான அமைப்பின் பணிப்பாளர் ஏ.கங்காதரன் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இலை உதிர்காலம்...



ஆண்டுக்கு ஒருமுறைதான்
மரம் செடிகள் உடையின்றி
தனது எழிலின்றி தோற்றமளிக்கும்
எழில் கொண்ட பல
உடல்கள் ஆயுள் முழுக்க
உடையின்றியே உதிர்ந்து
போய் கிடக்கின்றன
நம் நாட்டின் விதியென்று சொல்லி
விலகி நாம்போய்விடலாகாது
விதியை நினைத்தா நீ
இனப்பெருக்கம் செய்தாய்
அப்போ நீ செய்தது சதிதானே?
காமத்தின்மீது கவிழ்ந்து
கிடந்து விட்டு
காலத்தின் மீது பழி போடாதே

சுகபோகங்கள் அனுபவித்து விட்டு
சுமையென நீ
சிசுக்கொலை செய்கிறாய் - இல்லையேல்
குப்பைத் தொட்டியிலிடுகிறாய்
வசந்த காலம் தேடி
வான்வழிப் பயணம் செல்கிறாய்
சென்றங்கே செல்லாக்காசாகிறாய் உன்
செல்வங்களிங்கே தெருக்கோடியிலே
ஆடைகளின்றி அம்மணமாக
பலரின் ஏளனப் பார்வையிலே
கோணிக் குறுகி நிற்கின்றனர்

நீயோ ஆங்கில நாட்டிலே
நவநாகரீக வஸ்த்துக்களால்
அலங்கரித்து ஆட்டம் போடுகிறாய்
உன் உறவை நினைத்தாயா? இல்லை
உணர்வை மதித்தாயா?
தொலைகிறது
மனிதமெனும் புனிதம் - இவர்கள்
இன்று காகித கப்பல் செய்து
மழை நீரினிலே ஓட்டி
பெருமை கொள்கிறார்கள் - நாளை
கப்பலும் வாங்குவார்கள்
கடலிலே செலுத்துவார்கள்

ஆங்கில நாட்டின் அடிமைகள்
நீங்கள்

தாய்த்திருநாட்டின் தலைமைகள்
இவர்கள்
தமிழன் வரலாறு வாய்கிழிய பேசுகிறாய்
ஒரு நேர உணவளித்து
உயர்ச்சி அடைய வழி செய்வாயா?
உடுபுடவை சில தந்து
உறுதுணையாய் உயிர் காத்து
பல கலைகள் கற்றிவர்கள்
உயிர்ப்பிக்க உதவி செய்
நாட்டைத்தான் காக்க முடியவில்லை
நாட்டின் கண்களான நமதருமை
செல்வ சிறார்களையாவது
புலம்பெயர் தமிழனென்று
புலம்பும் நீ காப்பாற்று
உழைக்கும் பணத்தில்
ஒருசில ரூபாய்களை - உன்
வருங்கால செல்வங்களின்
வளர்ச்சிக்கு உதவிடு
இவர்களின் இலையுதிர் காலங்களை
வசந்த காலங்களாக்கி மகிழ்ந்து பார்
உன் பிறப்பின் அர்த்தம் தெரியும்
உழைப்பின் உன்னதம் புரியும்

பிணந்தின்னி கழுகுகளின் பிடியில்
நம் தலை முறை இனத்தை
தின்று விட்டது
அரசியல் நாடகமாடி இனி
இனத்தின் எச்சங்களை மிச்சம்
வைக்கத்தான் இணங்குமோ
அடையாளம் இல்லாமல்
செய்யத்துடிக்கின்றன
சில அடி வருடிகள்
இலையான்கள் போல்
கண்ட கண்ட இடங்களில்
மொய்த்து சொல்லொண்ணா
நோய்களை சுகமாக பரப்புகின்றன

இனம் காக்கும் அரசியல் என்று கூறி
பகல் வேசம் போட்டு - இனத்தை
பகடைக்காய்களாக்கி
உருட்டி விளையாடி
உரிமை மீட்கிறோம் என்று
உரத்து சப்தமிட்டு
இரவாகிப்போனதும் முக்காடிட்டு
ஆங்கிலப்பானங்களின்
ஆக்கிரமிப்பில்
மூழ்கி கடலுக்கும் விலைபேசி
கையொப்பமிட்டு கொடுக்கும்
கூட்டம்

இவர்களை நம்பி மோசம் போன
மக்கள் இல்லையில்லை - மாக்கள்
இங்கும் இலையுதிர் காலம்தான்
பிழைகளை திருத்தலாம்
திருத்தமே பிழையானால்
என் செய்யும் சமூகம்
இதை சமூகப் படுகொலை
என்று சொல்வதா இல்லை

இனப்படுகொலை என்பதா
இதையெல்லாம் செய்துவிட்டு
வெள்ளைக்காரன் போல்
மேனி மினுக்கி
அள்ளிக் கொடுப்பவன் போல்
ஆங்காங்கே பச்சை காட்டி
இச்சையூட்டி
போதை தந்து மயக்கும் இவர்களை
கச்சையின்றி தூக்கிலிடணும்
கனிவென்பதே காட்டாது
பிச்சை புகினும் கற்கை நன்றே
இலையுதிர் காலங்களில்
இருண்டு கிடக்கும்
சின்னஞ்சிறார்களின் கனவுகளை
நனவாக்கிடுங்கள்
காசுள்ளவர்களே கடவுள் நீங்கள்தான்
அவர்கள் பாசையில்....

ஆ. குகானந்தன்



## வடகிழக்கில் உதயமாகுமா?

# புதிய கூட்டணி


**வேல்மகன்**

தமிழர் தாயக பிரதேசமான வடகிழக்கிலிருந்து புதிய கூட்டணி ஒன்று உதயமாவதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த 12.11.2017 இல் யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தமிழ்மக்கள் பேரவையின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் புதிய கட்சிகளின் உதயம் தேவையானதா என நோக்குகையில் அது அவசியமான ஒன்றென பல புத்திஜீவிகள் கருதுகின்றனர். பல ஆண்டுகளாக உரிமை அரசியலுக்காக போராடிவந்த ஓர் இனம்,தன் இனத்தின் பெறுமதிமிக்க உயிர்களை அப் போராட்டத்தால் இழந்த இனம் இன்று அதன் தலைவர்களால் கைவிடப்படுகின்ற அல்லது சிந்தனை மாற்றம் செய்கின்ற ஒரு அரசியலுக்குள் இழுத்துச்செல்லப்படுவதால் இந்த தேவை உணரப்படுகின்றது. அண்மையில் அரசால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையின் படி தமிழ்த்தேசிய இனம் என்பதும் ,வடகிழக்கு இணைப்பு என்பதும் சமஸ்டித் தீர்வென்பதும் கைவிடப்பட்ட நிலையில் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளித்து ஒற்றை நாடு எனும் கருப்பொருளில் தீர்வு திட்டங்கள் தயாரிக்கப்படுவதை இந்த புத்திஜீவிகள் ஏற்கவில்லை.அத்துடன் போராட்டத்தின்பால் தமது இன்னுயிர்களை இழந்த வீரர்களினதும் பொது மக்களினதும் சொந்தங்களும் ஏற்கவில்லை. இந்த நிலையில்தான் புதிய கூட்டிணைவு பற்றிய கருத்துருவாக்கம் தோன்றியது. சுருங்கச் சொல்லின் இதுவரை தமிழ் மக்கள் பெரிதும் நம்பிய தமிழரசுக்கட்சியே மேற்சொன்ன விடயங்களுடன் அரசுடன் உடன்பட்டு, அக்கட்சியே இந்த தீர்வு திட்ட தயாரிப்பில் ஈடுபட்டுள்ளமை மக்களை சினம் கொள்ள செய்துள்ளது. இது தவிர, புதிதாக தயாரிக்கப்படும் தீர்வு திட்டம் அரசியலமைப்பு சபையில் விவாதிக்கப்பட்டு பின் பொது வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இந்த வாக்கெடுப்பில் தமிழ் மக்களும் ஈடுபட்டு உருவாகும் புதிய அரசமைப்புக்கு தமிழ் மக்களும் ஆதரவு என்பதை காட்டுவதற்காக ஒரு முன்னோடி தேர்தலாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நோக்கப்படுகிறது.

ஆக, தமிழர்களின் அபிலாசைகளை புதைத்து தமது மேலாதிக்க சிந்தனைகளை தமிழர்களின் மேல் திணிக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அல்லது தமிழரசு கட்சியை பயன்படுத்த இலங்கை அரசு முனையும் சூழலில்தான் இன்று தமிழர்களுக் கான மாற்றுக்கருத்தினை பதிவு செய்ய ஓர் மாற்று தலைமைத்து வத்துடன் கூடிய ஒரு கூட்டிணைவு அவசியமாகிறது. மக்களின் தேவை தமிழ்த்தேசியம் என்பதை கூறக்கூடியதாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் அக் கட்சி போட்டியிட்டு தமது குரலினூடாக மக்கள் கருத்தை பிரதிபலிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய பாரிய பொறுப்பை தமிழ் மக்கள் பேரவை சுமக்க முற்படுகின்றது. ஆனால் அதன் இணைத்தலைவர்களில் ஒருவரான வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் இருதலைக் கொள்ளி எறும்பாக புதிய கட்சிக்கு தலைமை ஏற்பதில் தனது ஆழமான அவதானிப்பை செலுத்தி வருகிறார். புதிய கட்சி உருவாக்கத்தால் தமிழரசு கட்சி அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிதைந்து அமைப்பழிந்து போனால் மாற்று தலமையாக தன்னால் பரிணமிக்க முடியுமா? அதற்கான உடல் ஆரோக்கியம் தன்னிடம் உண்டா எனவும், ஒரு வேளை மாற்று அரசியல் கட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டால் தான் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவராக வரலாற்றில் மாற்றப்பட்டு விடலாம் அல்லது துரோகி ஆக்கப்படலாம் எனும் சிந்தனையும் அவரை ஆட்கொண்டுள்ளது. கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி,மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் கூட்டிணைவுக்கான தமது விருப்பை தெரிவித்துள்ள நிலையில் மேலும் சில கட்சிகளையும் இணைத்துக் கொள்ள தமிழ் மக்கள் பேரவை முயற்சிப்பதையும் அறிய முடிகிறது. இப்போது மக்கள் மத்தியில் தோன்றியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை தமக்கு சாதகமாக்கி தமது அனுசரணையில் புதிய கூட்டிணைவை உருவாக்க தமிழ் மக்கள் பேரவை முன்னெடுக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் வெற்றி பெறலாம்.இருப்பினும் தமிழ் மக்கள் பேரவை சரியான அரசியல்வாதிகளை தெரிவு செய்வதில் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை இப்போது தோன்றியுள்ள அரசியல் நெருக்குவாரம், நீதியில் இனவாதம்,நியமனத்தில் பாராபட்சம், இலஞ்சம் ஊழல் போன்ற வியாதிகளுக்கு தமிழ் மக்கள் பேரவை மேற்கொள்ளும் முயற்ச்சிகள் மூலம் ஏதாவது அரசியல் பலம் ஒன்றை பெற முடியுமா எனும் எதிர்பார்ப்பும் கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. எது எப்படியோ, தமிழ்த்தேசிய சிந்தனையை சிதறவிடாது தனது அடுத்த சந்ததிக்கு கடத்துவதில் தந்தை செல்வநாயகம் வெற்றிகண்டதை போல உருவாகும் அடுத்த கூட்டணியும் தமிழ்த்தேசியத்தை தாங்கித், தடுமாறும். தமிழ் இளைஞர்களிடம் விடுதலை வேட்கையை உருவாக்கி இலக்கை அடையவேண்டும்.அதற்காக பேரவை உழைக்கட்டும்.



# முன்னாள் முதலமைச்சர் விசனம்.



ஏறாவூர் நிருபர்

பாராளுமன்றத்தில் மாகாணசபைகள் தேர்தல் திருத்தத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கியமைக்கு முன்னாள் முதலமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான நஸீர் அஹமட் அண்மையில் ஏறாவூரில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தக பைகள் வழங்கும் நிகழ்வின் போது தனது கண்டனத்தை தெரிவித்தார்.

மறைந்த தலைவர் அஸ்ரப் அவர்களினால் முஸ்லிம் சமூகத்தினுடைய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எத்தனையோ தாய்மார்களின் பிரார்த்தனைகளுடனும் இளைஞர்களின் தியாகத்துடனும் வளர்ந்த கட்சி அதன் நோக்கத்திற்காய் போராட வேண்டிய தேவை உருவாகி உள்ளது. முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளை இந் நாட்டில் நிலைபெறச் செய்வதற்காகவும் உருவாக்கப்பட்ட கட்சி மாகாணசபைகள் தேர்தல் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியதன் ஊடாக அந்த நோக்கத்தை இழந்து விட்டது. அதற்காய் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வரலாற்று துரோகத்திற்கு கை உயர்த்திய தலைமையும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று வந்து ஊரினுடைய மாகாணசபை பிரதிநிதித்துவத்தை எவ்வாறு கைப்பற்றுவது என்று மக்களை முட்டாள்களாக்க நினைக்கின்றவர்களை துரோகிகள் என முத்திரை குத்தும் நாள் மிக தொலைவில் இல்லை. இதற்காய் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் முஸ்லிம் சமூகத்தில் உள்ள நாம் அரசியல் ஞானம் உள்ளவராக மாறாதவரை எமது உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தின்
# புதிய மாவட்டச் செயலாளர்
# மா. உதயகுமார்



மட்டக்களப்பினை பிறப்பிடமாக கொண்ட மாணிக்கம் செல்லமாணிக்கம் தம்பதிகளின் மகனான உதயகுமார் 1960-12-21 பிறந்தார் இவர் ஆரம்ப இடைநிலைக்கல்வியினை கோட்டமுனை மகாவித்தியாலயத்திலும் (தற்போதைய இந்துக்கல்லூரி) மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் கற்றுக் கொண்டவராவார். பேராதனைப்பல்கலைக்கழகத்தில் இளமாணிப்பட்டத்தினை பொருளியல் துறையிலும் பட்டபின்டிப்ளோமா பட்டத்தைமுகாமைத்துவ துறையில் கிழக்குப்பல்கலைக்கழகத்திலும் பொதுநிர்வாக முதுமைப் பட்டத்தினை ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்து 1991 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சையிலே தெரிவாகி சுமார் 27 வருடங்களாக இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றிக்கொண்டு தற்போது இலங்கை நிர்வாக சேவையில் விசேடதர உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். பேராதனைப்பல் கலைக் கழகத்தில் விரிவுரையாளராக புள்ளி விபரத்துறையில் தனது அரச பதவியாக ஆரம்பித்து பட்டதாரி ஆசிரியராகவும் அதனைத்தொடர்ந்து உதவி அரசாங்க அதிபராக மண்முனை மேற்கு மண்முனை வடக்கு பிரிவுகளில் கடமையாற்றியவராவார் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் உதவி செயலாளராகவும் ஆரையம்பதி பிரதேச செயலகம் மண்முனைப்பற்று செயலகம் வாகரை பிரதேச செயலகம் ஏறாவூர் பற்று பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராக கடமையாற்றி மாகாண நிர்வாகத்தின்கீழ் உள்ளூராட்சி திணைக்களத்தில் ஆணையாளராகவும் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக ஏழு வருடம் கடமையாற்றினார் இலங்கை நிர்வாக சேவையினுடைய விசேடதரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டுமான சமூக அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டார் சிறந்த பிரதேச செயலாளராக சமூர்த்தி திட்டத்தில் தெரிவாகினர் அதேபோன்று உள்ளூராட்சி மாகாண அமைச்சினால் தேசியரீதியாக இடம்பெறுகின்ற சுவர்ண புரவர விருது வழங்கும் நிகழ்வில் இரண்டுமுறை மட்டக்களப்பு மாநகரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி விருது

தொடர்ச்சி பக்கம் 07இல்....

## மூதூர் முன்னம்போடிவெட்டையில்
# யானைகளின் அட்டகாசம்
# அச்சத்துடன் மக்கள்

மா. இளங்கோ





மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முன்னம்போடிவெட்டை ஸ்ரீ நாராயணபுரம் பாலத்தடிச்சேனை ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் இரவு நேரங்களில் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர் கடந்த நாட்களில் முன்னம் போடி வெட்டை கிராமத்திற்குள் நுழைந்த யானைகள் அக்கிராமத்தை சேர்ந்த பிரபாகரன் மா.சந்தானச்செல்வி கி.யோகேஸ்வரி ஆகியோரின் வீட்டினை உடைந்து சேதப்படுத்தியதுடன் அப்பகுதி விவசாய விரிவாக்க நிலையத்திலுள்ள பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளது. இந்த யானைகளின் அட்ட காசத்தால் கி.யோகேஸ்வரி என்பவரின் வீடு மூன்று தடவை தாக்குதலுக்குள்ளாகியுள்ளது இது குறித்து அக்கிராம சேவகருக்கு அறிவித்தும் சேதம் பற்றிய புகைப்படங்கள் வழங்கியும் இது வரை எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை எனத்தெரிவித்தார். கணவனின் உதவியின்றி தனிமையில் வாழும் இவரின் நிலையினை கிராம அபிவிருத்தி சங்கம் மூதூர் பிரதேசசெயலகத்திற்கு அறிவித்தமைக்கு அமைவாக ஐந்து யானை வெடிகள் மட்டும் வழங்கியதாக குறிப்பிட்டார். இதற்குரிய நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கிராமத்துக்குள் நுழைகின்ற யானைகளை தடுக்க நடவடிக்கையினை மேற்கொண்டு அச்சத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சொந்த மண்ணில் மரங்களை விதைப்போம்

**தேற்றாத்தீவு செ.ஸிந்தூ**



கா. இராசையா அவர்களுடன் இணைந்து சி. தனிகசீலன் அவர்களுடன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள்.

மரங்களே எமது ஆதித் தெய்வங்கள். மரங்களை வணங்குகின்ற தொன்மையான வழிபாட்டுமுறையைக் கொண்டநாம் பிறப்பு இறப்புக்களுக்கு மரங்களை நடும் மாண்பைக் கொண்டிருக்கின்றோம் ஆகவே ஆளுக்கொருமரம் நடுவோம் நாளுக்கொருவரம் பெறுவோம் என்பதையே மகுட வாசகமாகக்கொண்டு எமக்கு முன்னோடியாக இருந்து தனது பொழுது போக்கே மண்ணுக்குரிய அரிய மரங்களை நடும் பணியாகச் செய்துவரும் கா.இராசையாவின் வேண்டு கோளுக்கிணங்க அவரால் சேகரிக்கப்பட்ட சுமார் 5000 க்கும் மேற்பட்ட பழ விதைகள் தேற்றாத்தீவு கடற்கரை தோறும். நடப்பட்டன. எமதுமண்ணின் பசுமையையும், வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்வையும் பாதுகாக்கும் இந்தப் புனிதமான கைங்கரியத்தில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சில் மனிதவளப் பிரிவில் கடமை புரிபவரும் இயற்கை ஆர்வலருமான சி.தனிகசீலன் உட்பட ஆலய பரிபாலன சபையினர் விளையாட்டுக் கழகங்கள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மன்னிப்புக்கோரல்

கடந்த மூன்றாவது தமிழ்ஓசை பத்திரிகையில் வெளிவந்த "மூதூர் இந்து இளைஞர் மன்றம் எனும் போர்வையில் புதிய புல்லுருவிகள் புகுந்து தில்லுமுல்லு" என்னும். குறித்த கட்டுரையில் அகம் அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறுதலாக இடம்பெற்றது. என்பதனை தெரிவிப்பதோடு மூதூரில் வாழ்விடமற்ற யுத்த அனர்த்தங்களால் பாதிப்புற்ற பிள்ளைகளை சாரதா இல்லம் என்னும் காப்பகத்தில் திரு.சற்சிவானந்தம் அவர்களும் அவரது துணைவியாரும் பாதுகாத்து பராமரித்தனர். அதில் அகம் என்ற அமைப்பினை குறிப்பிட்டது தவறு என்பதுடன் அதனால் திரு. சற்சிவானந்தம் அவர்களின் கௌரவத்திற்கு ஏற்பட்ட இழுக்கிற்கும் மன உளைச்சலுக்கும் மன்னிப்புக்கோரி மனம் வருந்துகின்றேன்.

- ஆசிரியர் -

# மருத்துவக் கல்லின் மகத்துவங்கள்




கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்ட காத்தான்குடி ஐந்தாம் குறிச்சிப் பிரிவில் "பத்ரிய்யஹ் ஜும்அஹ் பள்ளிவாயல்" அமையப் பெற்றிருக்கின்றது. இப்பள்ளிவாயலானது இறை வானப் பகலவன் மறை ஞானப் பெருமகன் அல்-ஆலிமுல் பாழில், வல் வலிய்யுல் காமில் அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் (கத்தஸ ல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அன் னவர்களால் 1960ம் ஆண்டு ஸ்தாபி க்கப்பட்டதாகும். இது அன்று முதல் இன்று வரை ஸுன் னத்வல் ஜமாஅத்தின் நந்தவனமாகவும், இஸ்லாமிய உயர் ஞானத்தின் முத்துக்கள் பெறப்படும் நதிக் கரையாகவும் பிரகா சித்து வருகின்றது. மேலும், இப் பள்ளி வாயல் பல்வேறு விதமான அகமியங் களையும், அற்புதங் களையும் தன்னகத்தில் சுமந்து நிற்பதுடன், தற் போது அதிசங்கைக்கும், மரியாதைக்குமுரிய ஷெய்ஹுனா 'ம்ஸுல் உலமா அல்ஹாஜ் யு. அப்துர் றஊப் மிஸ்பாஹீ, பஹ்ஜீ அன்னவர்களின் உயர் வழிநடாத்தலின் கீழ் காலத்தால் அழியாத காவியமாக அழகு நடை போடுகின்றது. இப் பெருமைக்குரிய பள்ளிவாயலின் மேலுமொரு சிறப்பம்சம் யாதெனில் இப்பள்ளிவாயலின் ஸ்தாபகரான அல்-ஆலிமுல் பாழில், வல் வலிய்யுல் காமில் அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அன்னவர்களின் புனித அடக்கஸ்தலம் இப்பள்ளிவாயலிலேதான் மணம் வீசுகின்றது. மேலும் இவ்வடக்கஸ்தலத்தில் கேரளா மாநிலம் "கண்ணூர்" எனும் பகுதியைச் சேர்ந்த இறை நேசர்களில் ஒருவரான அதிசங்கைக்கும், மரியாதைக்குமுரிய அஸ்ஸெய்யிது ஷெய்ஹ் அப்துர் ரீத் தங்கள் மௌலானா வாப்பா அன்னவர்களால் விஷமிறக்கும் மருத்துவக் கல்லும் நடப்பட்டுள்ளது. இக் கல் பாம்பு, தேள், பூரான், நட்டுவக்காலி, நாய் போன்ற விஷம் நிறைந்த உயிரினங்களால் தீண்டப்பட்டவர்களுக்கு அவற்றின் விஷத்தை முழுவதுமாக இறக்கி வைத்து அதிநிவாரணம் அளிக்கக்கூடிய ஆரோக்கியக் கல்லாக சக்தி வாய்ந் தது. இக்கல்லில் உபாதைக்குள்ளான பகுதியை வைத்துப் பிடிக்கும் போது இக்கல்லிலிருந்து ஏதோ ஒருசக்தி உடலிருந்து விஷத்தை உறுஞ்சி எடுப்பது உணரப்படக்கூடியது. இது பாதிக்கப்பட்ட பலரின் உண்மையான வாக்கு மூலமாகும். மேலும் இன, மத பேதமின்றி நாளாந்தம் மக்கள் இவ்விடத்திற்கு வந்து பயன் பெற்றுச் செல்வது கண்ணுடாகக் காணக் கூடிய ஒன்றா கும். அல்லாஹு தஆலா ஒரு நோயை இறக்கினால் அதற்குரிய மருந்தையும் அவன் இறக்கியே வைக்கிறான் என்பது நபிமொழி.

எனவே படைப்புகளுக்கு உள்ளத்தால் ஏற்படக் கூடிய நோய்களுக்கும், உடலால் ஏற்படக் கூடிய நோய்களுக்கும் ஏற்ற மருந்துகளையும், அவற்றிக்கு உரிய மருத்துவர்களையும் அல்லாஹு தஆலா ஆங் காங்கே அமைத்தே வைத்திருக்கிறான் என்பது உண்மையானதாகும். அது அவனுடைய கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட விடயம் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். எனவே அந்த அடிப்படையில் விஷமிறக்கும் மருத்துவக் கல் இப்பள்ளிவாயலில் இடம் பெற்றிருப்பது அல்லாஹ்வுடைய அருளில் நின்றுமுள்ளதாகும். அவ்வருளை சுகயீனம் உற்ற அனைவரும் அடைந்து தங்களின் வாழ்க்கையை சுபீட்சம் பெற்றதாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே எம்முடைய இத்தகவலின் நோக்கமாகும். மேலும் சிலருக்கு கல்லில் என்ன மருத்துவக் குணம் இருக்கிறது என்று சந்தேகம் எழுந்தால் நாம் அவர்களுக்கு க.்பாவில் இருக்கக் கூடிய "ஹஜருல் அஸ்வத்" என்பதும் ஓர் கல்தான் என்பதையும், மேலும் மக்காவில் ஹாஜிகள் சுற்றிவரக் கூடிய "க.்பா" எனப்படுவது கற்களால் கட்டப்பட்ட கட்டிடம்தான் என்பதையும், கனிவுடன் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்.

**தகவல்:**
அஷ்ஃபான் நலன்புரிச் சங்கம்
காத்தான்குடி



# மட்டக்களப்பு பாடல்



பாடும் மீன் வாழும் எங்கள் வாவியம்மா..
மட்டக்களப்பு எங்கள் அன்னை பூமியம்மா – கவி
பாடும் மக்கள் வாழுகின்ற தேசமம்மா – நாங்க
பேசும் தமிழ் மணக்கும் நல்ல வாசமம்மா.....

கூத்து,கும்மி,வசந்தன்,கோலாட்டமம்மா – நாங்க.
பார்த்துப் போற்றி வளர்த்துவிட்ட கலைகளம்மா
தேனும், பாலும், தயிரும் நன்கு கிடைக்குமம்மா – புள்ளி
மானும், மயிலும், குயிலும் இங்கு வாழுதம்மா


காடும்,மேடும்,களனி என்று ஆனதம்மா – உழவர்
பாடும் பாட்டு காற்றினிலே தவழுமம்மா..
ஆறும், நதியும்,வயலும் இங்கு இருக்குதம்மா – அதனால்
சோற்றுப் பஞ்சம் எங்களுக்கு இல்லையம்மா...

கடற்காற்று, கரையை நோக்கி வீசுமம்மா – நீல
கடலினிலே படகு மெல்ல ஓடுமம்மா..
வயற்காட்டில் பொலிப்பாட்டு கேட்குமம்மா..
அதைக்கேட்டு மக்கள் மனம் மகிழுமம்மா .

முத்தமிழும் வாழுகின்ற பூமியம்மா – அந்த
வித்தக விபுலானந்தன் தேசமம்மா..
சித்தர்களும் வாழ்ந்திருந்த ஊர்களம்மா – அவர்
தத்துவங்கள் இன்னும் இங்கு வாழுதம்மா.

கோவிலூர் செல்வராஜன்

# திடீக்கு போற்றும் கலைஞர் நீலாவணன்



1950ம் ஆண்டளவில் எங்கள் மண்ணில் ஒரு நவீன இலக்கிய உணர்வு ஏற்பட்டது இந்த நவீன காலத்து விடிவெள்ளிதான். அமரர் கவிஞர் நீலாவணன் .

இன்றைய எமது மண்ணுக்குரிய கவிஞர்களின் முன்னோடி என்றும் சொல்லலாம். மீசை கறுக்காத இளைஞனாக பெரிய நீலாவணையிலிருந்து அவர் எழுத ஆரம்பித்த நான்கு ஐந்து ஆண்டுகளிலே மட்டக்களப்பு. கல்முனை பகுதிகளின் சகல இடங்களிலும் நவீன இலக்கியத்தின் மெய்ப்பொருள் பலரிடமும் தோன்ற ஆரம்பித்தன. அன்று எமது பிரதேசத்தினின்று சிறந்த கவிஞர்களாகவும், சிறந்த சிறுகதை ஆசிரியர்களாகவும் திகழ்ந்த மருதூர் கொத்தன், சத்தியநாதன், நுஃமான் ,சடாட்சரன், மருதூர் கனி, யாவரும் ஒரே இலக்கிய பண்ணையில் வளர்ந்தவர்கள். நுஃமானும், சத்தியநாதனும் நீலாவணனின் பள்ளித்தோழர்கள். இவர்கள் யாவரும் தங்களின் படைப்புக்களினால் ஈழத்து இலக்கிய உலகில் ஒருநிலையான தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் இவர்களுடைய எழுத்துக்களாலும், இலக்கிய முயற்சிகளாலும் தான் 1962ல் கல்முனை எழுத்தாளர் சங்கம் உருவாகியது. இந்த சங்கத்தின் முதல் தலைவர் நீலாவணன் அவர்களே. செயலர் மருதூர் கொத்தன் அவர்கள். அதன் பின் வந்தவர்களே சண்முகம் சிவலிங்கம், பாண்டியூரான் போன்றோர். இவர்கள் ஒருவரும் இன்று உயிருடன் இல்லை என்பது மனசு கனக்கும் செய்தி. இன்று மட்டக்களப்பு பிரதேசம் ஒரு கவிஞர்கள் நிறைந்த பிரதேசம் என்று சொல்லப்படுகிறது. இதற்கு கட்டியம் கூறியவர் அமரர் நீலாவணன் அவர்களே...

மிகத் தேர்ந்த இலக்கிய கவிஞரான ஏ .ஜே. கனகரத்தினா அவர்களிடம் ஒரு சில ஆண்டுகள் நான் கல்விபயின்றவன் (1967,1968,1969) அவர் சொல்லுவார் இயற்கை தொடர்புகள் அற்றவற்றை தற்செயல் பொருத்தம் வருந்தி இணைப்பது "புனைவு" (fancy) பொருள்களைஉருமாற்றி அவைகளை புதிதாக படைத்தல் "கற்பனை" (imagination). இந்த நுட்பங்களை உய்த்தறிந்தவர் நீலாவணன் அவர்கள். இவரின் கவிதைகளிலே உவமான உவமேயங்களை காணலாம். இதற்கு சான்று ஏ ஜே.கே யின் பாராட்டைப்பெற்ற நீலாவணனின் "முருங்கைக்காய்" கவிதையே

எத்தனையோ நாட்களுக்கு பின் கவிதை சுரக்கிறது. அதை எழுத முனையும்போது முருங்கைக்காய் பறித்து தருமாறு மனைவி கேட்கவே அவர் இசைந்து முருங்கையில் ஏற அது முறிந்து அவர் கீழே வீழ்கிறார். 'அந்தோ வந்த அருங்கவி இந்த அமளி கண்டேங்கோ மறைந்ததே' என்று நகைச்சுவையுடன் கவிதை முடிக்கிறார் கிழக்கின் கவிச்சக்கரவர்த்தி நீலாவணன்...

## கலைஞர் கௌரவம்

## மட்டக்களப்பு மாவட்ட அரச...

05ம் பக்க தொடர்ச்சி....

பெற்றார் கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியிலும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டியில் பசுமை விருதினையும் சுவடுகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சிறந்த சுவடுகள் காப்பகத்திற்கான விருதும் பெற்றுக்கொண்டார். ஜப்பான் கனடா ஜேர்மன் தென்கொரியா இந்தியா இந்தோனேசியா மலேசியா சீனா பிலிப்பைன்ஸ் ஆகியநாடுகளில் நிர்வாக பயிற்சிகளைப் பெற்றார் சுனாமி போர்கால சூழலிலும் அபிவிருத்தி திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்த பெருமைக்குரியவராவார் தனது அரச அதிபர் பதவியேற்பு நிகழ்வில் கருத்து தெரிவித்த போது மட்டக்க ளப்பு மாவட்டம் எனக்கு புதிதானதல்ல பல்வேறு மக்களையும் கொண்ட இந்த மாவட்டத்தில் மக்கள் பல தேவைகளுடன் வாழ்ந்து வருகின்றனர் அவர்களுக்கான தேவைகள் நிறைய இருக்கின்றன வறுமை சுற்றாடல் பாதுகாப்பு மக்களுடைய வாழ்வாதாரம் கல்வி வேலைவாய்ப்பு வீதி அபிவிருத்தி உட்கட்டுமானம் போன்ற பல்வேறு தேவைகள் செய்ய வேண்டியுள்ளது அரசாங்கத்தின் நிதி மாவட்டத்துக்கு பல்வேறு வகையிலும் கிடைக்கின்றது அவற்றை பயன்படுத்தி எதிர்காலத்தில் நாங்கள் பக்கச்சார்பற்ற முறையில் இனமத மொழி வேறுபாடின்றி அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

# மகத்தான மக்கள் பணியில் அருணாச்சலம் தங்கத்துரை

## ஆவணப்படைப்பு

### அமரர் அருணாச்சலம் தங்கத்துரை மூதூர் தொகுதி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

மூதூர் முத்து ஏழைகளின் தோழன் திருகோணமலை மாவட்டம் பெற்றெடுத்த பெருமகன் மக்கள் நலனே தன்னலம் கொண்டு உழைத்த உத்தம புருஷன் கல்வியே தன் மூச்சு என கருமமாற்றி எம் தமிழ் மாணவர்களின் கல்விக்காய் பெரும் பங்களித்த கலங்கரை விளக்கமாய் தோன்றிப் புகழுடன் போற்றிய கல்விப் பிதாமகன் அமரர் உயர் திரு. அருணாச்சலம் தங்கத்துரை அவர்களை நாளும் நினைவு கூற வேண்டியது ஒவ்வொரு திருகோணமலை தமிழ் மக்களினதும் கடமையாகும். தமிழ் மக்களின் பொருளாதாரம் விவசாயம் வாழ்வாதாரம் வீதி அபிவிருத்தி தொழில்வாய்ப்பு முதலியவற்றில் கண்ணும் கருத்துமாக கடமை யெனக்கொண்டு எம்மக்களுக்கு கச்சிதமாக உழைத்திட்ட எங்கள் இதயங்களில் நீக்கமற நிலைத்து நிற்கும் அன்னாரின் சேவைகள் ஆற்றிய மேலான பணிகள் மேலே கூறப்பட்ட மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் கவிதைகள் வடிவில் தந்துதவுமாறு அன்னார் பற்றி அறிந்தவர்கள் அரசியல் வாதிகள், கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், அரச உத்தியோகத்தர்கள், நண்பர்கள், பொதுமக்கள் அனைவரினதும் ஆக்கங்களையும் விரைவாக தந்துதவுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம் அவர் தொடர்பான சமூகப்பங்களிப்புடன் கூடிய புகைப்படங்கள் இருப்பின் தந்துதவினால் அவற்றை மீளவும் வழங்கிவைப்போம். இவை அனைத்தும் கொண்டதோர் மக்கள் பணியில் அருணாச்சலம் தங்கத்துரை என்னும் நூலினை வெளியிடவிருக்கிறோம். ஆகவே பின்வரும் முகவரிக்கு தங்கள் படைப்புக்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.

**அனுப்பவேண்டிய முகவரி**

**திருகோணமலை சமூகக் கற்கை நிலையம்**
இல.53 ஆசிரியர் சதுக்கம்
உவர்மலை மத்திய வீதி,
உவர்மலை, திருகோணமலை.
தொலைபேசி இல:- 0716466835 0767234560

# சாதாரண பொதுமக்களும் விளங்கக்கூடிய விதத்தில் சட்டங்கள்



## மட்டக்களப்பு மாவட்டநீதிமன்ற நீதிபதி எம்.பி.முகைதீன் எழுதிய சாதாரண பொது மக்களும் விளங்கக்கூடிய விதத்தில் சட்டங்கள். 03வது இதழின் தொடர்ச்சி...

.... இவ்வாறு பொலிசார் ஒரு நபரைக் கைது செய்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய நபருக்குக் கைது செய்வதற்கான காரணங்களைத் தெரிவிக்காமல் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அங்கு பல வகையான துன்புறுத்தல்களையும் சித்திரவதைகளையும் குறித்த நபருக்கு செய்வதும் பொருத்தமற்றதாகும். இவை சட்டத்தினால் அனுமதிக்கப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் பொலிஸார் கைது செய்யப்படுகின்ற சந்தா்ப்பத்தின் காரணங்களை சொல்லாமல் "நீர் பொலிஸ் நிலையத்துக்கு வந்தவுடன் உமக்கு அந்தக் காரணம் தெரிந்து விடும்" என்று கூறுவது பொருத்தமற்றதாகும். இவ்வாறு ஒரு நபரை காரணம் தெரிவிக்காமல் கைது செய்து அழைத்துச் செல்வது அவருடைய அடிப்படை மனிதஉரிமை மீறலுக்கான செயற்பாடாகும். அவ்வாறு கைது செய்யப்படுகின்ற நபர் எவரேனும் உயர் நீதிமன்றில் தன்னுடைய அடிப்படை மனித உரிமை மீறுதலுக்காக விண்ணப்பம் செய்தால் அவ்வாறு கைது செய்த பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே அமைந்து விடும்.

ஒரு நபரைப்பொலிசார் பிடியாணையின்றிக் கைது செய்கின்ற சந்தர்ப்பத்தில் அவர் செய்த குற்றத்தின் தன்மை பற்றி பொலிசார் அந்த நபருக்கு தெரிவிக்கவேண்டும் என்று இலங்கையில் தீர்க்கப்பட்ட வழக்கான Muthusamy Vs Gannangara C.J 52 NLR 524 என்ற வழக்கில் நீதி அரசர் Grasen அவர்கள் தீர்ப்பளித்திருக்கின்றார்.

இவ்வாறு பொலிசார் இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் சட்ட ஏற்பாடுகளுக்கெதிராகவும் குற்றவியல் நடைமுறைக்கோவை சட்ட ஏற்பாடுகளுக்கு எதிராகவும் இலங்கையில் உயர் நீதிமன்றத் தினால் தீர்க்கப்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராகவும் சட்டத்தை தங்களுடைய கையில் எடுத்து செயற்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அத்துடன் இது தண்டிக்கப்பட வேண்டிய விடயமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு கைதுகளின் போது பொலிசாருக்கும் அத்தகைய நபர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு இரு சாராரும் தாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய சம்பவங்களின் உச்ச கட்டமாக அண்மைக் காலத்தில் சில அப்பாவி நபர்கள் கொலை செய்யப்பட்டு பல உயர் பொலிஸ் அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களும் இலங்கையில் இடம் பெற்றிருக்கின்றன. (அண்மையில் எம்பிலிப் பிட்டியவில் ஏற்பட்ட பொலிசாருக்கெதிரான கொலை வழக்கு) பொலிசார் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்ட வரம்பிற்குள் செயற்பட்டால் இவ்விடயத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

ஒரு நபர் கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவருடைய கைதிற்கான காரணம் தெரிவிக்கப்படாமல் அவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படுவாரேயானால் அத்தகைய கைது சட்ட முரணாகவே கருதப்படும். அத்துடன் இத்தகைய செயலை ஒரு சாதாரண முறையற்ற செயலாகவும் கருத முடியாது என்று அப்போதைய பிரதம நீதியரசர் சர்வானந்தா அவர்கள் Mariyadas Vs A.G என்ற வழக்கில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இவ்விடயம் Fundamental Rights Decisions Vol 2 397 வெளிக்காட்டப்பட்டிருக்கின்றது.

### சட்ட முரணாகத் தடுத்து வைத்தல்

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்படுகளின்படி சட்ட முரணாக எவரையும் தடுத்து வைத்தல் ஆகாது என்பது தான் உண்மை.எங்களுடைய அரசியல் அமைப்பின் 13(2) பிரிவின் ஏற்பாடுகளின்படி கைது செய்யப்படும் ஒவ்வொரு நபரையும் அருகாமையிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்பு சட்ட ஏற்பாடுகளின்படி ஆஜர்படுத்தப்பட வேண்டும் அல்லது கொண்டு வரப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்கின்றது. நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடு என்னும் போது பிடியாணையின்றி கைது செய்யப்படுகின்ற நபர் ஒருவர் நீதவான் முன்பு எவ்வாறு ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றி குற்றவியல் நடபடி முறைக்கோவைச் சட்டத்தின் பிரிவு 37 ஏற்பாடு செய்கின்றது.

குற்றவியல் நடபடி முறைக்கோவைச் சட்டத்தின் பிரிவு 37 பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது. "ஒரு சந்தேக நபர் ஒருவரைப் பிடியாணையின்றிக் கைது செய்தால் பொலிஸ் உத்தியோகஸ்தர் அவரை 24 மணித்தியாலத்திற்குள் நீதவான் முன்பு ஆஜர்படுத்த வேண்டும்" என்று ஏற்பாடு செய்கின்றது.

இதே போன்று பிடியாணையின் உதவியுடன் பொலிசார் ஒருவரைக் கைது செய்தால் எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவையின் சட்டத்தின் பிரிவு 54 இன் கீழான சட்ட ஏற்பாடுகளின்படி தேவையற்ற தாமதங்கள் ஏற்படாதவாறு நீதவான் முன்பு அத்தகைய நபரை ஆஜர்படுத்த வேண்டும் என்பது ஏற்பாடாகும். சாதாரணமாகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபர் ஆகக்கூடியது 24 மணித்தியாலத்துக்கு வைக்கப்பட முடியும் என்பது எங்களுடைய சட்ட ஏற்பாடாகும் இது பொதுவான சட்ட நடைமுறை. ஆனால் பயங்கரவாத தடுப்புச்சட்டம் அத்துடன் அவசரகால நிலமையின் கீழ் கைது செய்யப்படுகின்ற நபர்கள் அத்தகைய சட்ட ஏற்பாடுகளின் கீழ் மிகவும் நீண்டகாலத்துக்கு பொலிஸ் காவலில் அந்த சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தடுத்து வைக்க முடியும் என்று ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை தவிர ஏனைய கைதுகளும் தடுத்துவைத்திருப்பதும் வேறுவிதமாகக் கைது செய்யப்படுவதும் சட்ட முரணாக தடுத்து வைத்தலாக கருதப்படும். உதாரணமாக பொலிசார் சந்தேக நபரை எங்களுடைய குற்றவியல் நடபடி முறைக்கோவையின் சட்ட ஏற்பாட்டின்படியும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏற்பாட்டின் படியும் 24 மணித்தியாலங்களே பொலிஸ் நிலையத்தில் ஒருவரை தடுத்து வைக்க முடியும். அவ்வாறு 24 மணித்தியாலத்துக்கு மேலதிகமாகச் சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படுவாரானால் அது சட்ட முரணான தடுத்து வைத்தலாகக் கருதப்படும்.இவ்வாறு தடுத்து வைப்பதற்கு பொலிசாருக்கு எவ்வித சட்ட அனுமதியும் இல்லை. பொலிசார் இவ்வாறு சந்தேக நபர்களைப் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்திருக்கின்ற சந்தர்ப்பங்களில் மிகவும் நிதானமாக செயற்பட்டு சந்தேக நபர்களை உரிய நேரத்தில் நீதவான் முன்பு ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடரும்....

# ஊசி

ஓட்டையுள்ள ஊசி
ஒல்லியான ஊசி
தைக்கும் நல்ல ஊசி
தரம் வாய்ந்த ஊசி

இரும்பில் செய்த ஊசி
இலகுவான ஊசி
சின்னஞ்சிறிய ஊசி
சீராய் தைக்கும் ஊசி

கூர்மையான ஊசி
நூல் கோர்க்கும் ஊசி
பளபளக்கும் ஊசி
பதமாய் உள்ள ஊசி



ம. ஹெசி கிரசன்சியா
தரம் 4V
மட் - அருணோதய வித்தியாலயம்

# பௌர்ணமி தினத்தில் புண்ணியரெத்தினம் சுவாமிகளால் நிகழ்த்தப்பட்ட ஆன்மீக அருளுபதேசம்



மனிதனும் அவன் மனமும் கலியும் கலியிலிருந்து விடுபடும் வழியும் இறைவன் அருளைப் பெறுவது எப்படி எனப் பல விதமான உண்மையான அரிய ஆன்மீக இரகசியங்களை உலக மக்களின் நலன் கருதி அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக இன்றுவரை எந்த எதிர்பார்புகளும் இன்றி எந்த விளம்பரங்களுமின்றி மக்களோடு மக்களாக இருந்து தன்னை நாடிவருபவர்கள் குறை களைந்து இடைவிடாது பூரணை தினம் குருவாரம் வியாழக்கிழமை விசேட வழிபாட்டு தினங்கள் எனவும் பல பிரதேசங்களில் தியான பீடங்களையும் அமைத்து ஒவ்வொரு ஞாயிறு தினங்களிலும் காயத்திரி மந்திரம் பாராயணம் செய்ய வைத்து கூட்டு வழிபாட்டினையும் ஏற்படுத்தி வழி காட்டி வருபவர்தான் மகா யோகி சற்குரு திரு சி.புண்ணியரெத்தினம் சுவாமிகள்.

இன்றைய சூழலில் உலக வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத மனித இனம் மெல்ல மெல்ல அழிவுப் பாதையினை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றே கூறலாம்.

**தொகுப்பு - அ. குகானந்தன்**

மக்கள் கேட்கலாம் இதைத் தடுக்க வழியே இல்லையா? என ஏன் இல்லை அதற்கும் வழி உண்டு ஆனால் உலகமெனும் மாயையில் சிக்குண்ட மனிதருக்கு இறை எனும் உலகின் மூல சக்தி மறந்து போனதால்தான் இந்த நிலமைகளுக்கு காரணம் ஆனால் இன்றுவரை இந்த விடயத்தினை மக்கள் உணர்ந்து கொள்ளவுமில்லை உணர முற்படவுமில்லை எனக் கூறலாம். இந்த உலகினை ஏழு கண்டங்களாகப் பிரித்து ஏழு ரிஷிகள் ஆட்சி செய்து வருகிறார்கள் அதுதான் ஏழு மலைகள் ஏழு கடல்கள் ஷப்த கன்னிகள் ஷப்தஸ்வரங்கள் வாரத்தில் ஏழு நாட்கள் இவ்வாறு அனைத்துமே ஏழாக பிரிக்கப்பட்டுள்ளன அனைத்தையும் அவதானமாக கூர்ந்து கவனித்தோமானால் இந்த பேருண்மை புலப்படும். இந்த ரிஷிகள் யோகிகள் ஞானிகள் எனப்படுவோரை இந்த மாய உலகில் இனங்காண்பது மிக அரிது அதன் காரணமாகத்தான் மக்கள் போலிகளுக்கு அடிமையாகி ஈற்றிலே ஏமாற்றமடைந்து தங்கள் வாழ்வினையே தொலைத்துள்ளார்கள் தொலைத்து வருகிறார்கள். உண்மையான இறை பக்தியோடு வழிபட்டு வருவோமானால் முதலில் நமக்கு உண்மையான ஞான குரு வழிகாட்டியாக அமைவது திண்ணம் இது நாம் கண்ட பேருண்மை அந்த தாகம்தான் என்னை மார்க்கண்டேய மகரிஷி மார்க்கண்டேய புராணத்தில் கூறியபடி "உலக உய்வுக்காக காயத்திரி மந்திரம் ஜெபம் செய்து காயத்திரி ஆலயங்களை அமைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றங்களுக்காக மகா யாகங்கள் நிகழ்த்தி அருள் வழங்க அவதரிப்பார் அவதார புருஷர்" என கூறியதற்கிணங்க அந்த மாகானுபாவராகிய பகவான் ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளை குருவாக பெற்றேன் அவர் இட்ட கட்டளையினை சிரம்மேற் தாங்கி இந்த தெய்வீக ஞானப்பணியினை எந்த வித தடங்கலுமின்றி தொடர்ந்து செய்து வருகிறோம். மனிதனின் மனதில் நினைவகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது அந்த நினைவகத்தில் எந்தெந்த விடயங்களை பஞ்ச புலன்கள் மூலம் அதிகமாக உள் வாங்குகிறானோ அதுவே அவனது செயல் சக்தியாக பலன் தருகிறது.

அமெரிக்காவின் ஹாம்பர்க் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் சிலர் ஒன்றிணைந்து, உலக நாடுகள் பலவற்றில் உள்ள பல்வேறு மந்திரங்களை ஆய்விற்கு உட்படுத்தினர். அப்போது காயத்திரி மந்திரம் ஒலிக்கும்போது மட்டும் நொடிக்கு சுமார் 1,10,000 ஒலி அலைகளை எழுப்புவதை கண்டு அவர்கள் ஆச்சர்யப்பட்டுள்ளனர்.அவர்கள் ஆய்வின் முடிவில், காயத்திரி மந்திரமே அதிக ஒலி அலைகளை எழுப்பும் உலகின் தலை சிறந்த மந்திரம் என்பதை தெரிவித்தனர். இந்த ஆய்விற்கு பின்பு அமெரிக்காவின் பிரபல வானொலிச் சேவையொன்றில் தினமும் இரவு 7 மணிக்கு தொடர்ந்து 15 நிமிடங்கள் காயத்திரி மந்திரம் ஒளிபரப்பப்படுகிறது மக்களின் அவலங்கள் துன்பங்களை செவியுற்ற இறைவன் அவருடைய துாதர்களை காலத்துக்கு காலம் அனுப்பியும் தேவையேற்படின் அவதாரங்களை நிகழ்த்தியும் காத்த வண்ணமேயுள்ளார். குருவருள் திருவருள் பேரருள் எனும் மூவகையான சக்திகள் உயிர்களை நல்வழிப் படுத்தி உயர் பேரின்பமாம் இறையின்பத்தை அனுபவிக்கச் செய்து முக்தியினை தரவல்ல சக்திகள் ஆனால் மனிதனோ இவற்றை விடுத்து ஆசை கோபம் காமம் பொறாமை வஞ்சகம் போன்ற அழிவினைத் தரவல்ல கொடிய எண்ணங்களை மனதின் நினைவகத்தில் சேமித்து வைப்பதால்தான் அவனால் இவ்வுலகின் கொடூரப் பிடியிலிருந்து விடுபட்டு மேலெழுந்து வர முடியவில்லை எமது சேமிப்பு சிறந்த விடயங்களாக இருந்தால் அதன் பெறுமதியும் வட்டியோடு சிறப்பானதாகவே திரும்ப கிடைக்கும் எமது சேமிப்பு தவறானதாக இருக்கும் பட்சத்தில் தவறான விளைவுகளே வட்டியும் முதலுமாக கிடைக்கிறது இங்குதான் மனிதன் தன்னை தன் மனதினை சுய ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும். மனம் எனும் பெரு வெளியில் ஆசை, கோபம்,காமம்,பொறாமை போன்ற தீய குணங்கள் விளையாட்டு வீரர்களாகவும் நாம் அதாவது நம் ஆன்மா பார்வையாளருமாக இருந்தால் மட்டுமே இந்த கொடிய அரக்க குணங்களிலிருந்து விடுபடலாம் இவ்வாறு பார்வையாளராக நம் ஆன்மா இருக்க தொடங்கி விட்டால் அதன்படி வாழத் தொடங்கி விட்டால் தீய விளையாட்டு வீரர்கள் மன மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டு நல்ல தன்மைகளை தரவல்ல சிறப்பான பாதையில் பயணிக்கவல்ல விளையாட்டு வீரர்களான அன்பு, கருணை, காருண்யம், பிற உயிர்களை தன்னுயிராக மதிக்கும் தன்மை, பரோபகார சிந்தனைகள் மேலோங்கும் அதன் நல் விளைவு இறைவன் யார் எங்கிருக்கிறார் படைப்பின் இரகசியமென்ன பிரபஞ்ச சக்தி எது எதனை இயக்குகிறது என பல வகையான மனித அறிவுக்கும் எட்டாத விஞ்ஞானிகளாலும் கண்டு பிடிக்க இயலாத அரிய மறைக்கப்பட்ட குப்த வித்தைகள் புலப்படும் அதுமட்டுமல்ல மனிதனும் தெய்வமாகலாம் மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அழிவுக்கு இடமேது இயற்கை ஏன் சீற்றம் கொள்ளப் போகிறது ஏன் போர் மூழப் போகிறது திடீர் மரணங்கள் எவ்வாறு நிகழப்போகிறது எதுவுமே நிகழ வாய்ப்பில்லை மனிதன் ஞானிகள் அடிச்சுவட்டினைப் பின்பற்றி அவர்கள் நெறி நின்று வாழ்வானேயானால் வரவிருக்கும் பேரழிவிலிருந்து காக்கப்படுவான். நல்ல விடயங்களை உங்களை அண்டி வருபவர்களுக்கு வழங்குங்கள் அதாவது அன்பினை வழங்குங்கள் ஆனால் அதை அவர்கள் மீண்டும் தரவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தை தரும் போதுதான் மனித மனம் விகாரமடைகிறது அந்த தனிமனித மனதின் விகாரம் பரவலாக்கப்பட்டு பல மனித மன விகாரமாகிறது அதுவே இயற்கை சீற்றங்கள் உலகப்போர்கள் என பல ரூபங்களில் அழிவினை ஏற்படுத்துகிறது உண்மையினைத் தேடும் போது உண்மையான குரு வழிகாட்டி உயர்ந்த இடத்திற்கு திண்ணமாக அழைத்துச் செல்வார்."அனைவருக்கும் என் குருநாதரின் ஆசீர்வாதங்கள்" இவ்வாறு பல ஆன்மீக இரகசியங்களை போதித்து மனித வாழ்வு சிறக்க பாடுபடும் ஒரு மகானை எம் சமூகம் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனையான விடயமே. இனியும் காலம் தாழ்த்தாது இந்த உலக சேமத்துக்கான தெய்வீகப் பணியில் மக்களாகிய நாமும் கூட்டுப் பிரார்த்தனைகள் வழிபாடுகள் என்பனற்றில் நம்மையும் ஈடுபடுத்திக் கொள்வோம்.

# மறைந்தும் மக்கள் மனங்களில் வாழும் மாணிக்கவாசகர்



இன்றும் கொழும்பு Y.M.C.A க்கு செல்லும் போதெல்லாம் வெறிச்சோடிய மனதுடன் நான் செல்வதுண்டு மனதின் ஆழத்தின் எனக்கே புரிந்த சோகம் எல்லா மனிதர்களுக்கும் சொன்னாலும் புரியாது. கொழும்பு Y.M.C.A யில் நானும் தந்தையும் சந்தித்து காலை உணவு எடுத்துக்கொள்ளும் இடம். இன்று என்னுடன் சிரித்துப் பேசவோ சுகங்களை துக்கங்களை பகிர்ந்து கொள்ளவோ ஒரு ஆத்மார்த்தமான உறவு இல்லை என்பது நிதர்சனமான போது நெஞ்சில் ஏதோ உருளுவது போல உணர்வு. ஒரு தந்தையின் பலம் பலவீனம் இரண்டையும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவன் நான் கோபப்பட்டு விட்டு பின்னர் வருந்துவதும் மன்னிப்பு கேட்பதும் எனது வழமையாக இருந்தது.ஏனெனில் பெற்றோர்களை வருத்துவது வஞ்சிப்பது போன்ற கொடுமைகளை எந்த தனயனும் செய்யக்கூடாது. அந்த நிதானம் எனக்கு நன்றாகவே இருந்தது.

சனிக்கிழமை (09.09.2017) வீரகேசரி பத்திரிகையில் எனது தந்தையை மறக்காது தனபாலசிங்கம் அவர்கள் எனது தந்தையைப் பற்றி எழுதியதை வாசித்தேன். அழகான தலையங்கம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது. "உதவுவதில் நிறைவு கண்ட மாணிக்கவாசகர்" சாலப் பொருத்தமான தலையங்கம். மனிதர்கள் பலனை எதிர்பார்த்து உதவுவதில் வல்லவர்கள் ஆனால் நிறைவுதான் பலன் என்று உதவுபவர்கள் சிலர் அத்தகைய மாண்புமிகு மனிதர்களில் ஒருவர்தான் எனது தந்தை. "அப்பா உனக்கு கணக்கும் தெரியாது கணக்கியலும் தெரியாது" என விசேடமாக எனது தந்தையிடம் பேசுவதுண்டு. "எனது அப்பாவின் ஒளிமிகுந்த கண்களும் சிரிக்கும்" என்று அப்பாவுடன் பழகியவர்கள் சொல்லுவார்கள். நகைச்சுவை உணர்வுள்ளவர். எனது அனுபவத்தில் கணக்குப்பார்த்து வாழ்பவர்களிடம் உள்ளத்திலோ அதை வெளிப்படுத்தும் பார்வையிலோ உதடுகளிலோ ஒளியையும் புன்சிரிப்பையோ நான் பார்த்ததில்லை. எனது அப்பாவிடம் அந்த ஒளி உள்ளத்திலும் கண்களிலும் காணப்பட்டது. பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் அவரின் உயிர் நாடியாக இருந்தது என்பதை நான் அறிவேன்.

தனபாலசிங்கம் கூறியது போல தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைபெற்ற தமிழர்கள் மிகவும் குறைவு.தந்தை தனது துறையில் மட்டுமல்ல சட்டத்துறையிலும் பல நல்ல மனிதர்களிடம் நட்பு பாராட்டியிருந்தார். ஏனெனில் எனது பேரன் ஒரு புகழ்பெற்ற சட்டத்தரணி சட்டத்துறையிலே எனது தந்தை மிகவும் நெருங்கிப்பழகிய கல்வி மான்களில் ஒருவர் முன்னாள் சொலிசிற்றர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஞானதாசன் ஐயா அவர்கள்.என் தந்தைமீது அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவர் ஞானதாசன் ஐயா அவர்கள். எனது தந்தை கொழும்பு அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது தனது பாரியாருடன் சென்று உடல்நிலையை அறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார் திரு.ஞானதாசன் அவர்கள். எனது தந்தையின் கடைசிக்காலத்தில் தந்தையை உயிருடன் பார்க்க கிடைத்தது மகிழ்ச்சி என கூறுவார். இருவரும் உற்ற நண்பர்கள் மட்டுமல்ல பலன் கருதாது உதவுவதில் நிகரற்றவர்கள் என்பதை நான் அறிவேன். ஞான தாசன் ஐயாவுக்கு எனது நன்றிகளை கூற கடமைப்பட்டிருக்கின்றேன். ஞானதாசன் ஐயா அவர்கள் எனது தந்தைமீது வைத்திருக்கும் பாச த்தை நான் அறிவேன். தந்தை தனக்கு எழுதிய கடிதத்தை இன்னமும் பத்திரமாக வைத்திருந்து ஒரு முறை என்னிடம் காட்டினார்.அதே பாசம் எனக்கும் எனது தந்தையிடம் இருந்தது. எனது சிறிய தந்தை சிறிஸ்கந்தராஜா முன்னாள் சட்டமா அதிபர் கமலசபேசன் ஐயா அவர்கள் ஞானதாசன் ஐயா அவர்கள் எல்லோரும் நல்ல நண்பர்கள். எனது தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்கவும் என்னை பிடித்திருந்ததன் காரணமாகவும் என்னை சட்டமா அதிபர் திணைக்களத்தில் முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கமலசபேசன் ஐயா அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சேர்த்துக்கொண்டார். தந்தை எனது கல்விக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அமெரிக்காவில் நோற்றடாம் பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்றுச்சென்று சட்ட முதுமாணி பட்டம் பெற்ற போது எனது தந்தையின் ஆசீர்வாதம் எனக்கு கிடைத்திருந்தது. அதே போல் பிரித்தானிய புகழ்பெற்ற பல்கலைக்கழகமான WEST LONDON பல்கலைக் கழகத்தில் சட்டமுதுமாணிப்பட்டம் பெற்ற போது எனது தந்தையின் ஆன்மாவின் ஆசீர்வாதம் எனக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. பெற்றோரின் ஆசீர்வாதம் இல்லாமல் பிள்ளை உருப்படுவது என்பது அரிதான விடயம். எனது தந்தை என்னை புதல்வனாக மட்டு மல்ல நண்பனாகவும் நடத்தினார். உண்மையில் பிரித்தானியா L.L.M பட்டம் பெற்ற போது தந்தை உயிருடன் இல்லை தனபாலசிங்கம் அவர்கள் கூறியது போல எனது தந்தை உயிருடன் இருந்திருந்தால் மிகவும் சந்தோசம் அடைந்திருப்பார்.

எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திலும் மாற்றத்திலும் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவர் எனது தந்தை.மற்றையவர் முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கமலசபேசன் ஐயா அவர்கள் சட்டக்கல்லூரியிலும் எனக்கு குற்றவியல் சட்டம் கற்பித்தார். என்னை சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு அரச சட்ட வாதியாக இணைத்துக்கொண்டவர். எனது கல்விக்கு பெரும் ஊக்கமளித்தவர். கடவுள் பக்தியும் மனசாட்சியும் நிறைந்த நல்ல மனிதர். சட்டக்கல்லூரியிலும் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் எனது குருநாதராக விளங்கியவர். தம்பி இந்த துறையிலே கவனமாக இருக்கவேண்டும் என்று கமலசபேசன் ஐயா அவர்கள் என்னிடம் சொல்வார்.என்னிடம் சொல்ல முடியாத விடயங்களை தந்தையிடம் கூறி என்னைக் கண்டிப்பார். அவரது வழிகாட்டல்கள் இன்று எவ்வளவு தூரம் பயனுள்ளவை என சிந்தித்துப்பார்க்கின்றேன். நிறைய புத்தகங்களை வாசிக்க சொல்லி என்னை வளர்த்ததாலோ என்னவோ எனது புலமையும் ஓரளவு வளர்ந்திருந்தது. மேடைப் பேச்சும் எழுத்தாற்றலும் எனக்கு வரவேண்டும் என்பதற்காக எனது தந்தை என்னை வழிநடத்தியமை அற்புதமானது.

என்னை முழுமனிதனாக பூரணமனிதனாக நல்ல பிரஜையாக காணவேண்டும் என்ற எனது தந்தையின் கனவை நான் பூர்த்திசெய் திருக்கின்றேனா என்பதை காலம் தான் கூற வேண்டும்.தந்தையை பற்றி நிறைய எழுதலாம் இப்போது இது போதும் அவரது ஆசீர்வாதங்களை வேண்டி வணங்கி எனது தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

## நுண்ணறிவு போட்டி இல. 01இல் பணப்பரிசில் பெறுபவர்கள்



**முதலாம் இடம் 500/=**

**யசோதரன் சிந்துகேஷன்**
தரம் - 04 R
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை

**இரண்டாம் இடம் 300/=**

**கோகிலதாஸ் தனுஸ்கர்**
தரம் - 04 R
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை

**மூன்றாம் இடம் 250/=**

**இளங்குமார் பிரணீத்**
தரம் - 04 K
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை

இவர்களுக்கான பணப் பரிசில்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஓசை

# நுண்ணறிவு வினாவிடைப் போட்டி



**போட்டி இல. : 03**

## வினாக்கள்

01) மாலதி கதைப்புத்தக மொன்றில் 50 பக்கத்தில் இருந்து 100 ம் பக்கம்வரை வாசித்தாள் .அவள் வாசித்த பக்கங்கள் எத்தனை?
02) வீதி ஒன்றில் இரண்டு தூண்களுக்கு இடையில் பத்து மீற்றர் இடைவெளி என்ற ஒழுங்கில் 10 தூண்கள் நடப்பட்டன. எனின் அவ்வீதியின் நீளம் யாது?
03) 5CM அகலமும் 6CM நீளமும் கொண்ட செவ்வக வடிவமான காகித அட்டைத் துண்டில் இருந்து 2CM நீள அகலத்தைக் கொண்ட எத்தனை சதுரங்கள் வெட்டலாம் ?
04) ஓர் எண்ணுடன் 5 கூட்டி ஐந்தால் பெருக்கினால் வருவது ஐம்பதிலும் பத்து குறைவான எண்ணாகும். எனின் ஆரம்பத்தில் இருந்த எண் யாது ?
05) காலையில் பாடசாலைக்குச் செல்லும் ரகுவின் நிழல் அவனைப் பின் தொடர்ந்தது .அவன் செல்லும் திசையாது ?
06) இரு எண்களின் கூட்டுத் தொகை 12 ஆகும் .அவ்விரு எண்களுக்கு இடையிலான வித்தியாசம் 4 எனின் அவ்விரு எண்களும் எவை ?
07) திவி வளர்த்த தாராக்களின் கால்களினதும் ,சொண்டுகளினதும் கூட்டுத்தொகை 27 ஆகும் எனின் அவள் வளர்த்த தாராக்கள் எத்தனை ?
08) ஒரு கேக் துண்டில் 1/4 பங்கை தங்கையும் 1/2 பங்கை தம்பியும் உண்டனர் .அதிகமான பங்கை உண்டவர் யார்?
09) அகலத்தின் இரு மடங்கு நீளத்தைக் கொண்ட செவ்வகம் ஒன்றின் சுற்றளவு இருபத்துநான்கு சென்றிமீற்றர் ஆகும் .எனின் செவ்வத்தின் அகலம் யாது ?
10) நோயாளி ஒருவர் நாளொன்றுக்கு ஒரு வேளை இரண்டு மாத்திரைகள் வீதம் மூன்று வேளை அருந்துவார். அவர் ஐந்து நாட்களுக்கு அருந்தும் மாத்திரைகள் எத்தனை ?
11) மு.ப 10.30 மணிக்குஆரம்பித்த கலைவிழா ஒன்று பி.ப 2.15 மணிக்கு நிறைவு பெற்றது .கலைவிழா நடைபெற்ற நேரம் யாது ?
12) ஒரு வியாபாரி முக்கோண வடிவில் ஐந்து நிரைகளில் சில சவர்க்காரக் கட்டிகளை அடுக்கி வைத்திருந்தார். அவரிடம் உள்ள சவர்க்காரக் கட்டிகள் எத்தனை ?
13) பாத்திரமொன்றில் இருந்த 3Lபானத்தை ஒரு குவளையில் 125ML வீதம் எத்தனை குவளைகளில் இடலாம்?

### நிபந்தனைகள்.

- தரம் - 03 04 05 வகுப்பு மாணவர்கள் மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.
- வினாக்களுக்குரிய சரியான விடையினை கீழ்குறித்த படிவத்தில் எழுதி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வெட்டி தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் படிவத்தினை பிரதி செய்து அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- குறித்த பத்து வினாக்களுக்குரிய சரியான விடையினை எழுதியவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூபா 500, 300, 250 பணப்பரிசில்கள் வழங்கப்படும் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர்கள் அடுத்து வரும் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன் அதிஸ்டசாலிகளாக 5பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

குறிப்பு : நுண்ணறிவு 02 இற்கான விடைகளும் வெற்றிபெற்றவர்கள் விபரமும் 05 இல் வெளியாகும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி**
**20-12-2017**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு**

### விடைகளை எழுதி அனுப்பவேண்டிய படிவம்

01. ____________ 02. ____________
03. ____________ 04. ____________
05. ____________ 06. ____________
07. ____________ 08. ____________
09. ____________ 10. ____________
11. ____________ 12. ____________
13. ____________

முழுப்பெயர் : ____________
முகவரி : ____________
தொலைபேசி இல. : ____________ தரம் : ____________
பாடசாலை : ____________

# மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 2017 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்



ரா. குணரக்ஷன் புள்ளி - 184
செ. பிரவிந்த் புள்ளி - 183
க. ஹேஷகைலாஸ் புள்ளி - 181
ஜீ. பத்மகுமாரன் புள்ளி - 180
ஜெ. மதுராந்தகன் புள்ளி - 178
ச. ரோஜித் புள்ளி - 178
பி. ஸரோநித் புள்ளி - 171
சு. டிரோஷன் புள்ளி - 171



சா.ஜொனத்தன் லிஷான் புள்ளி - 171
பு. நிருபன் புள்ளி - 170
கு. விபுஷாலினி புள்ளி - 170
உ.யனுஷாந் புள்ளி - 169
ஆ. யதுஷாஜினி புள்ளி - 169
வி. அனேஸ்கர் புள்ளி - 168
ப. சாகித்தியன் புள்ளி - 168
மு. ஷாகிரி புள்ளி - 168



பி. ஷாறுஷன் புள்ளி - 167
இ. கௌதிஷ்யன் புள்ளி - 166
அ. சுஜானுஷன் புள்ளி - 165
சு. ஜெரோஷன் புள்ளி - 165
ந. டிரேஸ் புள்ளி - 165
செ. சிமிர்த்தி புள்ளி - 165
க. ஜருஸ் புள்ளி - 165
தி. ஜினோசன் புள்ளி - 164



ஜீ. கபிஷேக் புள்ளி - 163
வ. கம்சன் புள்ளி - 163
ச. அஷ்விந்த் புள்ளி - 163
வி. பிரவிந் புள்ளி - 162
ஜெ. தக்ஷயா புள்ளி - 162
லோ. கிருஸ்னுஜன் புள்ளி - 162
பி கரிதர்ஷன் புள்ளி - 162
லே. லிதுர்ஷனா புள்ளி - 162



நி. சப்தமி புள்ளி - 160
பு. ஹீர்த்தனன் புள்ளி - 160
சு. ஹரீஷன் புள்ளி - 159
தெ.கோபினா புள்ளி - 159
சே. ஹரிராம் புள்ளி - 158
த. அசோர்ச்சிதன் புள்ளி - 158
ந. கேஷிவர்ஷினி புள்ளி - 158
கோ. ஷிருஸ்ணா புள்ளி - 157



கே. அஸ்வினி புள்ளி - 157
கி. மிஸ்ரிக்கா புள்ளி - 157
நோ. ஜெரிசாந் புள்ளி - 156
வே. கேஷாத்மன் புள்ளி - 156
த. லிலுஷன் புள்ளி - 155
பா.சஷான் புள்ளி - 154



பாடசாலை அதிபருடன் கற்பித்த ஆசிரியர்கள்


HOTEL EAST LAGOON



Munai Lane, Uppodai Lake Road, Sinna Uppodai, Batticaloa - 30000 , Sri Lanka
Tel.+94 65 2229222, +94 65 2229223, Fax; +94 665 2229221, E-mail: info@hoteleastlagoon.lk, Web: www.hoteleastlagoon.lk


இப் பத்திரிக்கையானது தமிழ் ஓசை நிறுவனத்தினால் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் நவெம்பர் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது